# சிறுபாணாற்றுப்படையில் நிலப்பாகுபாடும் பண்பாடும்

*முனைவர் இரா. மாலினி*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, (சுய நிதிப்பிரிவு)
பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி,
கோயம்புத்தூர்.
https://doi.org/10.5281/zenodo.14383349

**ஆய்வுச் சுருக்கம்**
*நிலத்தைஅடிப்படையாகவைத்துக்கொண்டுபகுக்கப்பட்டநிலப்பரப்புநிலத்திணைகள்எனப்பட்டன. தமிழகம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனும் நான்கு வகை நிலத்திணைகளைக் கொண்டது. எனினும் முல்லையும் குறிஞ்சியும் தன் இயல்பிலிருந்து திரிந்து பாலை என்கின்ற வடிவத்தைப் பெறும் போது அது ஐந்தாவது நிலமாக கொள்ளப்பட்டது. இத்தகைய நிலப் பாகுபாடுகள் இயல்பின் அடிப்படையில் மட்டும் அமையாமல் மக்களின் வாழ்வியலோடு இணைந்தவையாகவும் அமைந்திருந்தன என்பதற்குச் சான்றாக சங்க இலக்கியங்கள் அமைகின்றன. குறிப்பாக ஆற்றுப்படை இலக்கியங்கள் குறிப்பிடும் நிலப்பாகுபாடுகள் பரந்து பட்டனவாக அமைந்திருந்தன என்பதை சிறுபாணாற்றுப்படையின் வழி அறிந்து கொள்ள முடிகின்றது. சிறுபாணாற்றுப்படையில் ஆற்றுப்படுத்த முயலும் பாணன், அரசன் நல்லியக்கோடனின் ஆட்சிக்குட்பட்டு விளங்கிய நிலப்பரப்புகளையும் அங்கு வாழும் மக்களின் வாழ்வியல் நிலையையும் உணவுமுறை பற்றியும் விருந்தினர்களை உபசரிக்கின்ற பாங்கும் பண்பாடாக விளக்கப்பட்டுள்ளன. கட்டுரையில் ஆமூர், வேலூர், எயிற்பட்டினம், என்னும் நிலப்பரப்புகள் நல்லியக்கோடனின் ஆட்சியின் கீழ் இருந்ததை எடுத்துக்காட்டுகிறது. ஓய்மான் நாட்டு நல்லியக்கோடனைப் புகழ்ந்து பாடி, பரிசில் பெற்ற பாணன் ஒருவன், தன் எதிர்ப்பட்ட இன்னொரு பாணனிடம் நல்லியக்கோடனின் நல் இயல்புகளையும் அவன் நாட்டின் வளத்தையும் செல்வச் செழிப்பையும் எடுத்துக் கூறுவதாக இந்நூல் அமையப் பெறுகிறது. குறிஞ்சி நாட்டுத் தலைவன் நல்லியக்கோடனைக் காண, நெய்தல் நில எயிற்பட்டினம், முல்லை நிலம், மருத நிலம் ஆகிய ஊர்களைக் கடந்து செல்லவேண்டும். இச்செய்தியைக் கூற வந்த புலவர் இந்நான்கு நிலச் சிறப்புகளை மட்டும் கூறாது மூவேந்தர்களின் தலை நகரான வஞ்சியும் உறையூரும் மதுரையும் எடுத்துக்கட்டிய்ள்ளார்.*

**முன்னுரை**

*தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க காலம் என்பது பொற்காலமாக திகழ்கிறது. இக்காலத்தில் தோன்றிய பாடல்களை வீரயுகப் பாடல்கள் என்றும் குறிக்கின்றனர். இச்சங்க இலக்கியங்கள் தேசிய இலக்கியங்கள் திணை இலக்கியங்கள் என்றும் பெயர் பெறுகின்றன. இவ்விலக்கியங்கள் தொல்காப்பியம் கூறும் இலக்கணங்களுக்குத் துணை நிற்கும் பாங்கில் அமைந்துள்ளன.*

*உலகில் உள்ள நிலப்பகுதிகள் அனைத்தும் ஒரே அமைப்புடையன அல்ல ஒவ்வொன்றும் வெவ்வேறு நிலையை உடையனவாக அமைகின்றன. ஒவ்வொரு நிலமும் அங்கு அமைகின்ற தட்பவெட்ப நிலையாலும் ஒவ்வொரு நிலத்தினுடைய மக்களின் பழக்கவழக்கங்கள் உணவு, உடை, பண்பாடு முதலியனவும் வேறுபடுவதை அறிய முடிகின்றது. இவை வகை நிலங்களையும் சிறுபாணாற்றுப்படை மிகச் சிறப்பாக எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது சிறுபாணாற்றுப்படையில் குறிக்கப்படும் ஐவகை நிலங்களும் அந்நிலங்களின் வாழும்*

மக்களின் உணவும் பண்பாடும் இக்கட்டுரையில் எடுத்துரைக்கப்படுகின்றது.

## நிலப்பாகுபாடுகள்

மலையும் மலை சார்ந்த பகுதியும் குறிஞ்சி நிலம் என்று அழைத்தனர். மலைக்கு அடுத்து இருந்த காட்டு நிலப்பகுதியை முல்லை என்றும் முல்லைக்கு அடுத்து அமைந்த வயலும் வயல் சார்ந்த இடங்களையும் மருதம் என்று குறிப்பிட்டனர். பண்டைய தமிழகத்தின் கிழக்கு, மேற்கு தெற்கு பகுதிகள் கடலால் சூழ்ந்தவை ஆக இருந்தன. அத்தகைய நிலப்பகுதிகளை நெய்தல் நிலம் என்று பகுத்துள்ளனர். பருவ காலத்தில் பெய்ய வேண்டிய மழை பெய்யாமல் வறட்சி ஏற்பட்டு நிலம் பசுமை இல்லாமல் வறண்டு இருக்குமேயானால் அந்தப் பகுதியைப் பாலை நிலம் என்றும் சுட்டியுள்ளனர். இவை மக்களின் வாழ்வியலோடு ஒன்றிணைந்தவையாக அமைந்திருந்தன.

நிலம் என்பது மனிதர்களும் விலங்குகளும் வாழ்வதற்குத் தேவையான அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஒரு அடிப்படையான ஆதாரமாக அமைகிறது. நிலம் என்பது அனைத்து வகை நிலப்பகுதிகளையும் குறிக்கக்கூடிய பொதுச்சொல்லாக அமைகிறது. நிலத்தை பண்டைய மக்கள் இயற்கைச் சூழலுக்கு ஏற்ப பிரித்துள்ளனர். பொதுவாக இத்தகைய நிலப்பகுதிகள் விளைச்சலுக்கும் ஏற்ற நிலமாக கொள்ளப்பட்டது. ஒவ்வொரு நிலமும் அதன் தன்மைக்கு ஏற்ப மண்வளமும் நீர் வளமும் நிறைந்து காணப்பட்டது பொதுவாக நிலப்பகுதிகள் பெரும்பாலும் மழையை எதிர் நோக்கியே அமைந்திருந்தது ஒவ்வொரு நிலங்களும் பயன்படுத்துக்கூடிய நிலங்களாகவும் பயன்படாத நிலங்களாகவும் குறிக்கப்பட்டிருந்தன.

தொல்காப்பியம் நிலத்தை, திணை அடிப்படையில் பாகுபடுத்துகிறது. குறிஞ்சி, முல்லை, மருதம்,நெய்தல், பாலை என நிலம் ஐந்தாகப் பிரிக்கப்படுகிறது.

''முதல் எனப்படுவது நிலம் பொழு திரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந்தோரே''
(தொல்கப்பியம்,அகத்திணையியல், நூற்பா: 4)

என்னும் நூற்பா வழி முதல் பொருளாக நிலத்தையும் பொழுதினையும் தொல்காப்பியர் குறித்துள்ளார். தொல்காப்பியர் குறிப்பிடும் நிலங்களாக,

''மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலென
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே''
(தொல்காப்பியம்,அகத்திணையியல்,நூற்பா: 5)

எனக் கூறும் நூற்பாவில் கடவுளை முன்னிறுத்தி நிலத்தை அடையாளம் காட்டுகிறார். முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனக் கூறும் இந்நால்வகை நிலத்துடன் நிலமற்ற பாலை நிலத்தையும் தொல்காப்பியர்,

''நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு
முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே''
(தொல்காப்பியம், நூற்பா: 11)

எனும் நூற்பாவின் வழி பாலை நிலத்தை நடுவுநிலை திணை என்று குறிப்பிடுகின்றார் எனினும் பாலை நிலம் என்பது,

''முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் திரிந்து
நல்லியல்பு அழிந்து நடுங்குதுயர் உறுத்துப்
பாலை என்பதோர் படிவங் கொள்ளும்''
(சிலப்பதிகாரம், காடுகாண் காதை, 64-66)

என்னும் சிலப்பதிகார வரிகளின் வழி பாலை என்பது குறிஞ்சியும் முல்லையும் தன் வளமை இழந்து காணப்படும் போது அதுவே பாலை நிலமாகக் கொள்ளப்பட்டது என்பது புலனாகிறது.

தமிழகத்தில் உள்ள மலைத்தொடர்கள் குன்றுகள், காடுகள், ஆறுகள் ஆகியன இந்நிலப் பகுதியை பல்வேறு கூறுகளாகப் பிரித்துள்ளன. இதனையே சங்க இலக்கியங்களில் குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம் போன்ற நிலப்பிரிவுகள் உணர்த்துகின்றன. இப்பிரிவுகளை திருத்தொண்டர் புராணம் பின்வரும் பாடலில் விளக்கிக் கூறுகிறது.

***''தாஇல் செம்மணி அருவியாறு இழிவன சாரல்;***
***பூவில் வண்டினம் புதுநறவு அருந்துவ புறவம்;***
***வாவி நீள்கயல் வரம்புஇற உகைப்பன மருதம்;***
***நீவி நித்திலம் பரத்தியர் உணக்குவ நெய்தல்***
***(திருத்தொண்டர் புராணம்: 1083)***

*இவ்வாறு பிரித்துக் கூறப்பட்ட நிலப்பகுதிகள் ஒவ்வொன்றும் தனித்தனியான ஒரு நிலப் பகுதிகளாக இலக்கியங்களில் சித்தரிக்கப் பட்டுள்ளன. சங்க இலக்கியங்கள் காட்டும் இத்தகைய நிலப்பகுபாடுகள் பல்வேறு படிநிலைகளிலிருந்து சங்க கால தமிழகத்தின் நாகரீகத்தையே எடுத்துக்காட்டுகின்றன.*

**சிறுபாணாற்றுப்படை குறிப்பு**

*சங்க இலக்கிய பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று. பத்துப்பாட்டுகளில் மூன்றாவதாக சிறுபாணாற்றுப்படை அமைந்துள்ளது. இந்நூலை இயற்றியவர் இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார். ஒய்மான் நாட்டு நல்லியக்கோடனைப் புகழ்ந்து பாடியுள்ளார். அகவற்பாவால் அமைந்த நூல் 269 அடிகளைக் கொண்டது.*

*ஒய்மான் நாட்டு மன்னனான நல்லியக்கோடன் ஓவியர் குடும்பத்தில் பிறந்தவன். மிகுந்த வள்ளல் தன்மை உடையவன். மாவிலங்கை எனும் ஊரைத் தன் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தவன். ஒய்மான் நாடு என்பது தற்போதுள்ள திண்டிவனம் அருகில் உள்ள நாடாகும். அந்நாட்டில் வேலூர், கிடங்கில், ஆமூர், எயிற்பட்டினம் ஆகிய ஊர்கள் இருந்தன. நல்லியக் கோடனைச் சிறப்பித்து புறநானூற்றில் நன்னாகனார் எழுதிய இரண்டு பாடல்கள் கிடைக்கப் பெறுகின்றன. எயிற்பட்டின நாடன், மாவிலங்கை மன்னன், கிடங்கிற்கோமான் என்றும் போற்றப்படுகிறான். ஓவியர் குலத்தில் பிறந்தவன் ஆதலின் ஓவியர் பெருமகன் என்றும் கூறப்படுகிறான்.*

**வஞ்சி நகரம் (சேர நாடு)**

*பண்டைய தமிழகம் மூன்று பெரும் பேரரசுகளாகப் பிரிக்கப்பட்டு இருந்தன. அவற்றுள் சேர நாடு மலை வளம் நிறைந்ததாக அமைந்திருந்தது. சேர மன்னன் குடியில் பிறந்தவன் வடபுலத்தில் உள்ள இமயமலையின் மேல் சேரரின் சின்னமான வளைந்த வில்லினைப் பொறித்த திண்ணிய தோள்களை உடைய குட்டுவனின் பெருகி வரும் நீரினையும் வாயிலையும் உடைய வஞ்சிநகரம் என்று குறிப்பிட்டுள்ளார். இதனை,*

***''குடபுலம் காவலர் மருமான் ஒன்னார்***
***வடபுல இமயத்து வாங்குவில் பொறித்த***
***எழு உறழ் திணி தோள் இயல் தேர் குட்டுவன்***
***வருபுனல் வாயில் வஞ்சியும் வறிதே''***
***(சிறுபாணாற்றுப்படை , பாடல் வரிகள்:47-50)***

*என்னும் அடிகள் வஞ்சி நகரம் என்பது சேர அரசர்களின் ஆட்சிக்கு உட்பட்ட நிலப் பகுதியாக இருந்துள்ளது என்பதை எடுத்துக் காட்டுகின்றன.*

**மதுரை (பாண்டிய நாடு)**

*சிறுபாணாற்றுப்படையில் பாண்டிய நாட்டின் நிலப்பரப்பாக மதுரை குறிக்கப்பட்டுள்ளது. மதுரையில் உமணர்கள் வலிமையான காளைகளை உடைய உப்பு வண்டியுடன் வருகின்றனர். உப்பு வணிகரின் மனைவி பெற்ற, அணிகலன்களை அணிந்த புதல்வர்கள் முத்துக்களை கிலுகிலுப்பை ஆகக் கொண்டு விளையாடும் நிறைந்த நீ ரை எல்லையாக உடைய கொற்கையின் மன்னன் தென்னாட்டின் மன்னர் குடியைச் சேர்ந்தவன். பகைவரின் நிலங்களைக் கொண்டவன். முத்துமாலை அணிந்தவன். வெண்குடை உடையவன், விரைந்து செ ல்லும் தேரையுடைய பாண்டியனின் தமிழ் வீற்றிருந்த, பெறுதற்கரிய மரபையுடைய மகிழ்வைத் தருகின்ற தெருக்களையுடைய மதுரை என்று குறிப்பிடுகிறது. இதனை,*

***''மண் மாறு கொண்ட மாலை வெண்குடை***
***கண்ணார் கண்ணி கடுந்தேர்ச் செழியன்***

***தமிழ் நிலை பெற்ற தாங்கு அரு மரபின்***
***மகிழ்ந்தனை மறுகின் மதுரையும் வறிதே''***
***(சிறுபாணாற்றுப்படை , பாடல் வரிகள்: 64-67)***

*எனும் பாடல் அடிகள் பாண்டியர்களின் நிலப்பரப்பாக மதுரையை எடுத்துக் காட்டியுள்ளது. மதுரை மாநகர் முத்துக்கள் நிறைந்தும் உப்பு வணிகம் செய்கின்ற மக்களையும் உடையதாக இருந்தது என்பதை எடுத்துரைக்கின்றது.*

**உறந்தை (சோழ நாடு)**

*சிறுபாணாற்றுப்படையில் சோழ நாட்டு நிலப்பரப்பாக உறந்தை நகரை எடுத்துரைத்துள்ளது. மருத நிலம் சூழ்ந்த நிலையான குடியிருப் பையுடைய கிழக்கின்கண் உள்ள நிலத்தின் மன்னர் குடியில் பிறந்தவன். இடி தன்னுடைய கழுத்தினால் உரசும் கதவையுடைய பகைவரின் உயர்ந்த தொங்கும் கோட்டையை அழித்தவன் சோழன், ஒளியுடைய கடகம் அணிந்த பெரிய கைகள் உடையவன். தான் தேடாது அடைந்த நல்ல புகழையுடையவன் நல்ல தேர்களையுடைய சோழனின் குடிமக்கள் நாட்டை விட்டு விலகாத சோழ நாட்டின் உறந்தையில் கிடைக்கும் பரிசு சிறிது எனக் குறிப்பிடுவதன் வாயிலாக சோழ நாட்டின் நிலப்பரப்புகளில் உறந்தை குறிப்பிடப்படுகிறது என்பதை,*

***''தூங்கு எழில் எறிந்த தொடி விளங்கு தடக்கை***
***நாடா நல்லிசை நற்றேர் செம்பியன்***
***ஓடாப் புட்கை உறந்தையும் வறிதே''***
***(சிறுபாணாற்றுப்படை, பாடல் வரிகள்:47-50)***

*என்னும் பாடல் வரிகளால் அறிய முடிகின்றது.*

**கடையெழு வள்ளல்களின் நிலப்பரப்பு**

*கடையெழு வள்ளல்களை சிறுபாணாற்றுப்படை எடுத்துரைப்பதால் கடையெழு வள்ளல்கள் ஆட்சிபுரிந்த நிலப்பரப்பும் குறிக்கப்பட்டுள்ளது. காட்டு மயிலுக்குத் தன் போர்வையைக் கொடுத்த பெறுவதற்கு அரிதான அழகை உடைய ஆவியர் குடியில் பிறந்த அண்ணலும், பெரிய மலையின் தலைவனுமான பேகன் என குறிக்கப்பட்டுள்ளமையால் பெரிய மலைகள் உள்ள பகுதியை பேகன் ஆட்சி செய்தான் என்பதை அறிய முடிகின்றது. பெரிய மலைகள் என்னும் குறிஞ்சி நிலப்பரப்பு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.*

***''பிறங்கு வெள்ளருவி வீழும் சாரல்***
***பரம்பின் கோமான் பாரியும்''***
***(சிறுபாணாற்றுப்படை , பாடல் வரிகள்:90-91)***

*என்னும் பாடல் அடிகளால் முல்லைக் கொடிக்குத்தன் தேரினைக் கொடுத்தவனாகிய பாரி ஆண்ட நிலப்பரப்பு வெள்ளை அருவிகள் வீழும் மலைச்சரிவிலிருந்து வீழும் பறம்பு மலை என குறிக்கப்பட்டுள்ளது. காற்று தங்கும் உயர்ந்த சிகரங்களை உடைய அடர்ந்த நாட்டைப் பெற்ற நள்ளியும் என்பதை,*

***''துளி மழை பொழியும் வளித்துஞ்சு***
***நெடுங்கோட்டு நளிமலை நாடன் நள்ளியும்''***
***(சிறுபாணாற்றுப்படை , பாடல் வரிகள்:106-107)***

*என குறிப்பிட்டுள்ளமையால் மலை நாட்டிற்கு தலைவனாக நள்ளி குறிப்பிடப்படுகிறான். ஓரியின் ஆட்சிக்கு உட்பட்ட கொல்லிமலைப் பகுதியும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.*

**நெய்தல் நிலப்பரப்பாகிய எயிற்பட்டினம்**

*நெய்தல் பூவே நெய்தல் நிலத்திற்குத் தனித்துவத்தை அளித்தது. தமிழகத்தைச் சுற்றியுள்ள கடற்கரை நிலப்பரப்பு நெய்தல் நிலமாகும். இங்கு வாழ்ந்த மக்கள் பரதவர், நுளையர், வலைஞர் என் அழைக்கப்பட்டனர். மீன் பிடித்தல், உப்பு விளைவித்தல், முத்துக் குளித்தல் போன்றவை இங்கு வாழ்ந்த மக்களின் முக்கியத் தொழிலாக அமைந்திருந்தன. இத்தகைய நிலப்பரப்பினை*

***''பாடல் சான்ற நெய்தல் நெடு வழி***
***மணி நீர் வைப்பு மதிலொடு பெயரிய***
***பணிநீர்ப் படுவின் பட்டினம் படரின்''***
***(சிறுபாணாற்றுப்படை , பாடல் வரிகள்:151-153)***

*எனும் பாடல் வரிகள் அலையும் நீரை உடைய கடற்கரையில் அன்னத்தைப் போன்ற மலர்களை தாழை பூக்கவும், செருத்தி மலர்கள் கண்டாரைப் பொன்னென மருளச் செய்யவும் நீலமணியைப் போன்ற மலர்களைப் பூக்கவும் புன்னை மரங்கள் முத்து போன்ற அரும்பு கொள்ளவும் கடற்கரையின் வெண் மணலில் கடல் நீர் படர்ந்து ஏற, புலவர் பாடும்படியான*

*சிறப்பையுடைய நெய்தல் நிலத்தில் உள்ள நீண்ட வழியில் நீலமணியைப் போன்ற நீர் சூழ்ந்த இடங்களையும் மதிலையும் தன் பெயரில் கொண்ட குளிர்ந்த நீரை உடைய குளங்களையும் உடைய எயிற்பட்டினம் என்று நெய்தல் நிலப்பரப்பைச் சுட்டிக்காட்டியுள்ளது. அங்கு வாழும் மக்களான பரதவப் பெண்கள் பழையதாகிய கள்ளைக் கொணர்ந்து குடிக்கக் கொடுப்பார்கள். மலர்கொத்துக்களையுடைய தோட்டங்களை உடைய கிடங்கில் என்னும் ஊருக்கு மன்னன் அரும்பு அவிழ்ந்த மலர்ந்த மாலையை அணிந்த நல்லிய கோடனைப் பாடி தாள இறுதியுடைய குழலின் தாளத்திற்கு ஆடும் விரலியருடன் நீங்கள் உலர்ந்த குழல் மீன் குழம்பைப் பெறுவீர்கள் என்பதை*

***''தளை அவிழ் தெரியல் தகையோற் பாடி***
***அறல் குழல் பாணி தூங்கியவரொடு***
***வறல்குழல் சூட்டின் வயின்வயின் பெறுகுவீர்''***
***(சிறுபாணாற்றுப்படை,பாடல்வரிகள்:161-163)***

*எனும் வரிகள் எடுத்துரைக்கின்றன. நெய்தல் நில உணவான மீனை வருகின்ற விருந்தினர்களை உபசரித்து, அவர்களுக்குக் கொடுத்து மகிழ்ந்துள்ளனர் என்பதையும் அறிய முடிகின்றது.*

**முல்லை நிலமாகிய வேலூர்**

*அடர்ந்த காட்டு நிலப்பரப்பு முல்லை நிலம் ஆகும். இங்கு வாழ்ந்தவர்கள் ஆயர் அல்லது இடையர் என அழைக்கப்பட்டனர். இவர்களின் முக்கியமான தொழிலாக ஆடு, மாடுகளை மேய்த்தனர். இந்நிலத்தில் கிடைக்கும் பொருள்களான பால், தயிர், வெண்ணை போன்றவற்றைப் பிற நிலப்பரப்பில் உள்ளவர்களிடம் கொடுத்து, பண்டமாற்றாகத் தமக்கு வேண்டியவைகளைப் பெற்றனர். இங்கு வாழ்ந்த இடங்களைச் சேரி என்றும் அழைத்தனர் இவர்களின் தலைவர்கள் குறும்பொறை நாடன் என்றும் அழைக்கப்பட்டார்.*

*நல்லியக்கோடனது நாட்டில் முல்லை மலர்கள் மலர்ந்து இருக்கக்கூடிய காட்டுப் பகுதியாக வேலூர் குறிக்கப்படுகிறது. பசிய அரும்புகளையுடைய அவரைக் கொடி பூக்கவும், காயாமலர்கள்மலரவும், முசுண்டைகொடிகள் மலர்களை மலர்ந்து பரப்பவும், இந்திரகோபப் பூச்சிகள் எங்கும் ஊர்ந்திருக்கவும் முல்லை ஒழுக்கம் பொருந்திய முல்லைக் கொடிகள் உடைய முல்லைக் காட்டில் மலை இடுக்குகளில் குதிக்கும் அருவிகளையுடைய பெரிய மலையில் ஞாயிறு மூழ்கிய நேரத்தில் வானை நோக்கி வலிமை மிக்க வேலின் நுனியைப் போல உள்ள மலர்கள் பூத்த குளங்களையுமுடைய வெற்றியை உடைய வேலூரை அடைந்தால் என்பதை,*

***''முல்லை சான்ற முல்லை அம்புறவின்***
***விடர்கால் அருவி வியன் மலை மூழ்கிச்***
***சுடர் கால் மாறிய செவ்வி நோக்கித்***
***திறல்வேல் நுதியின் பூத்த கேணி***
***விறல்வேல் வென்றி வேலூர் எய்தின்''***
***(சிறுபாணாற்றுப்படை , பாடல் வரிகள்:170-173)***

*எனக் குறிப்பிடுவதால் நல்லியக்கோடனின் ஆட்சிக்குட்பட்ட பகுதியாக வேலூர் எனும் நிலப்பரப்பு குறிக்கப்பட்டுள்ளது. இந்நிலப்பரப்பு முல்லை நிலமாகிய காட்டுப் பகுதியாக அறிய முடிகின்றது. அத்தகைய காட்டு பகுதிகள் நிறைந்த வேலூரை அடைந்தால் அங்குள்ள எயினர் மக்கள் புளியை இட்டு சமைத்த வெப்பமான சோற்றை, இனிய மாமரத்தின் தளிர்போன்ற மேனியையும் சில் கை வளைகளையும் அணிந்த நும் குடும்பத்தின் பெண்களோடு நீவிர் ஆமான் சூட்டு இறைச்சி யையும் பெறுவீர்கள் என்பதை,*

***''உறுவெயிற்கு உலைஇய உருப்பு அவிர்***
***குரம்பை எயிற்றியர் அட்ட இன் புளி வெஞ்சோறு***
***தேமா மேனி சில் வளை ஆயமொடு,***
***ஆமான் சூட்டின் அமைவரப் பெறுகுவீர்''***
***(சிறுபாணாற்றுப்படை,பாடல் வரிகள்:174-177)***

*எனக் குறிப்பிட்டுள்ளது. இங்குள்ள மக்கள் தன்னை நாடி வருபவர்களுக்குக் காட்டில் இருக்கின்ற மான் இறைச்சியுடன் சூடு சோற்றையும் படைத்தளித்துள்ளனர் என்பதை அறிய முடிகின்றது.*

**மருத நிலப்பரப்பாகிய ஆமூர்**

ஆற்றுப்படுகைகள் சேர்ந்த வளமான இடங்கள் மருதம் என அழைக்கப்பட்டன. மருத ஒழுக்கம் நிலை பெறுவதற்கு அமைந்த மருத நிலத்தில் குளிர்ந்த வயல்களையும் அந்தணர்கள் குறைதல் இல்லாத அரிய காவலையுடைய பெரிய ஊர்களையும் அழகிய குளிர்ச்சியான அகழிகளையும் உடைய நல்லியக்கோடனின் ஆமூரை நீங்கள் அடைந்தால் என்பதை,

''மதி சேர் அரவின் மானத் தோன்றும்,
மருதம் சான்ற மருதத் தண் பணை,
அந்தணர் அருகா அருங்கடி வியன் நகர்,
அம் தண் கிடங்கின் அவன் ஆமூர் எய்தின்''
(சிறுபாணாற்றுப்படை , பாடல் வரிகள்:185-189)

குறிப்பிடுவதால் நல்லியக்கோடனின் ஆட்சிப் பரப்பு ஆமூர் என்னும் நிலப்பரப்பு வரை படர்ந்திருந்தது என்பதை அறிய முடிகின்றது. அங்கு வாழும் மக்களாகிய உழத்தியர்கள் வருகின்ற விருந்தினர்களுக்கு கரிய வைரம் பாய்ந்த உலக்கையின் பூணின் முகத்தைத் தேயச்செய்த குற்றுதல் அமைந்த மாட்சி மைப்பட்ட அரிசியினால் செய்த கட்டியாகிய வெள்ளைச் சோற்றையும் பிளந்த காலை உடைய நண்டின் கலவையுடன் உங்களுக்கு உண்ணத் தருவாள் எனக் குறிப்பிட்டுள்ளமை மருத நிலத்தில் விளைந்திருக்கின்ற நெல் சோற்றையும் அங்கு வயல்களில் இருக்கின்ற நண்டையும் உணவாகக் கொண்ட தன்மையும் அதையே வந்த விருந்தினர்களுக்கும் உணவாகக் கொடுத்துள்ள தன்மையையும் அறிய முடிகின்றது. இச்செய்தியை,

''இருங்காழ்உலக்கை இரும்பு முகம் தேய்த்த
அவைப்பு மாண் அரிசி அமலை வெண்சோறு
கவைத்தாள் அலவன் கலவையோடு பெருகுவீர்''
(சிறுபாணாற்றுப்படை,பாடல் வரிகள்:193-195)

எனும் வரிகள் மூலம் சிறுபாணாற்றுப்படை எடுத்துரைக்கின்றது.

**பாலை நிலப்பரப்பு**

நல்லியக்கோடனிடம் பரிசு பெற விரும்பிய பாணன் பாலை நிலத்தைக் கடந்து செல்ல வேண்டும் அத்தகைய பாலை நிலத்தினை, இம்மணல் வெயில் கால வெப்பத்தை மிகுதியாக ஏற்றுக்கொண்டு கொல்லன் உலைக்கல்லில் சூடேற்றிய இரும்பு போலக் கொதிக்கின்றது என்று பாலை நிலத்தைச் சுட்டியுள்ளார்.

''அயில் உருப்பு அனைய ஆகி ஐது நடந்து
வெயில் உருப்புற்ற வெம்பரல் கிழிப்ப,
வேனில் நின்ற வெம்பத வழி நாள்,
காலை ஞாயிற்றுக் கதிர் கடா உறுப்ப
பாலை நின்ற பாலை நெடு வழி,
சுரன் முதல் மராஅத்த வரி நிழல் அசைஇ''
(சிறுபாணாற்றுப்படை, பாடல் வரிகள்:7-12)

என்னும் பாடல் வரிகள் வெப்பத்தின் சூட்டை உடைய பரல்கள் தங்கள் கால்களைக் கிழித்ததால் மெல்ல நடந்து சென்று முதுவேனில் காலத்தில் காலை நேரத்தில் கதிர்களால் வெப்பத்தைச் செலுத்த பாலை தன்மை கொண்ட நீண்ட பாலை வழியைச் சுரத்தில் உள்ள கடம்ப மரத்தின் வரிகளாக உள்ள நிலத்தில் தங்கிச் செல்ல வேண்டும் என குறிப்பதன் வழியாக நல்லியக்கோடனை அவனது ஊருக்குச் சந்திக்கின்ற வழியில் பாலை நிலப்பரப்பு காணப்படுகின்றது என்பதை அறிய முடிகின்றது.

**நல்லியக்கோடனின் நிலப்பரப்பு**

சிறு பாணன் கிடங்கிலை நோக்கிச் சென்ற பெருவழியின் இடையிலே எயிற்பட்டினம், வேலூர், ஆமூர் எனும் ஊர்கள் இருந்தன. எயிற்பட்டினம் என்பது கிழக்குக் கடற்கரை ஓரமாக இருந்த ஒரு துறைமுகப்பட்டினம் ஆகும். எயிற்பட்டினத்தை சூழ்ந்து மதில் சுவர் கோட்டையாக அமைந்திருந்தது. ஆகவே அது எயிற்பட்டினம் என்றும் சோபட்டினம் என்றும் பெயர் பெற்றிருந்தது. கடலோரமாக நெய்தல் நிலத்திலே இருந்த எயிற்பட்டினத்துக்கு மேற்கே குறிஞ்சி நிலத்தில் நல்லியக் கோடன் அன்றைய தலைநகரமான கிடங்கில் எனும் ஓர் இருந்தது. இந்த நெய்தல் நிலத்து எயிற்பட்டினத்திற்கும் குறிஞ்சி நிலக் கிடங்கிலுக்கும் இடையிலே வேலூர், ஆமூர் என்னும் ஊர்கள் இருந்தன. இவ்வூர்கள் எல்லாம் ஓய்மான் நாட்டில் அடங்கி இருந்தன.

ஓய்மான் நாடு என்பது இப்போதைய தென் ஆற்காடு மாவட்டத்தில் திண்டிவனம் தாலுகாவில் இருக்கிறது. இடைக்கழி நாட்டில் உள்ளநல்லூர்எனும்ஊர்குறிக்கப்பட்டுள்ளது. இடைக்கழி நாடு என்பது தற்போதுள்ள செங்கல்பட்டு மாவட்டத்தின் மதுராந்தகம் தாலுகாவில் அமைந்துள்ளது. இந்த இடைக்கழி நாட்டில் இப்போது நல்லூர் என்னும் சிற்றூர் உள்ளது. நல்லூரிலே நத்தத்தனார் எனும் புலவர் வாழ்ந்தமையால் இடைக்கழி நாட்டுக்கு அண்மையிலே தெற்கில் நல்லியக்கோடனது ஓய்மான் நாடு இருந்தது.

இடைக்கழி நாட்டு நல்லூரில் இருந்து தெற்கே சென்றால் ஓய்மான் நாட்டின் கிழக்குப் பகுதியாகிய பட்டின நாட்டை அடையலாம். அதாவது எயிற்பட்டினத்தை அடையலாம். அது கடற்கரைப் பகுதியாகிய பட்டின நாடு பெரும்பான்மையும் நீரும் நிலமுமாக இருந்தமையால் அது மாவிலங்கை எனும் பெயர் பெற்றது. தற்போது ஓய்மான் நாட்டு மாவிலங்கை பகுதியில் ஏரிகளும் ஓடைகளும் உப்பளங்களும் காணப்படுகின்றன. ஓய்மான் நாட்டின் கடற்கரைப் பகுதியாகிய மாவிலங்கை தற்போது மறைந்து அவ்விடத்தில் மரக்காணம் என்னும் ஊர் அமைந்திருக்கிறது. இவ்வூர் பிற்காலச் சோழர்களின் சாசன எழுத்துக்கள் காணப்படுகின்றன இவ்வூர் ஓய்மான் நாட்டு பட்டினம் என்றும் பட்டின நாடு, எயிற்பட்டினம் என்றும் அழைக்கப்படுகிறது எயிற்பட்டினம் பிற்காலத்தில் மரக்காணம் என்னும் பெயர் பெற்றது எனலாம்.

பிறகு அங்கிருந்து புறப்பட்டு தென்மேற்கு நெடுவழியாக நெடுந்தோறும் நடந்து சென்றால் வேலூர் என்னும் ஊரை அடைகின்றார்கள். இது முல்லை நிலத்தில் இருந்த ஊராகக் குறிக்கப்படுகிறது. இத்தகைய வேலூரைப் பாணனுக்கு அறிமுகப்படுத்துகின்றார். இவர் அக்காலத்தில் சிறப்புற்றிருந்த சிறிய கிராமங்களாக இருந்தன. ஆற்காடு மாவட்டத்தில் புகழ்பெற்று விளங்கும் வேலூர் சிறுபாணாற்றுப்படையில் குறிக்கப்படும்கிடங்கிலுக்கும்எயிற்பட்டினத்திற்கும் இடையில் உள்ள கிராமமாக இருக்கின்ற வேலூர் என அறியப்படுகிறது.

வேலூரை அடுத்து வட மேற்கு திசையில் சென்றால் மருத நிலமான ஆமூர் என்னும் ஊரை அடைகிறான். நல்லாமூர் என்ற பெயர் உள்ள ஊர் ஒன்றும் தற்போது உள்ளது. இந்த நல்லாம்பூர் சிறுபாணாற்றுப்படையில் கூறுகின்ற ஆமூராக இருக்கக்கூடும். பழைய ஆமூரும் இப்போதைய நல்லூமூரும் ஒரே ஊராக இருந்திருக்கக்கூடும். ஏனெனில் இந்த நல்லூர் கிடங்கிலுக்கு அருகில் உள்ளது.

ஆமூரிலிருந்து புறப்பட்டு மேற்கே சென்றால் நல்லியக் கோடனுடைய கிடங்கில் என்னும் ஊரை அடையலாம் என்று சிறுபாணாற்றுப்படை கூறுகிறது. எனவே கிடங்கிலுக்கு சிறுபாணன் சென்ற பெருவழி அல்லது நத்தத்தனார் சென்ற பெருவழி, இடைக்கழி நாட்டு நல்லூரிலிருந்து புறப்பட்டு இப்போதைய மரக்காணம் ஆகிய எயிற்பட்டினத்திற்குச் சென்று, அங்கிருந்து வேலூருக்குச் சென்று, அங்கிருந்து புறப்பட்டு ஆமூரை அடைந்து, ஆமூரிலிருந்து கிடங்கிலை அடைந்தார் என்பது தெரிய வருகிறது.

## நிறைவுரை

ஆற்றுப்படை இலக்கியங்களில் ஒன்றான சிறுபாணாற்றுப்படையில் பல்வேறு வகையான நிலப்பரப்புகள் குறிக்கப்பட்டுள்ளன. நல்லியக் கோடனை குறிப்பிடும்போது ஓய்மான் நாட்டு நல்லியக்கோடன் எனக் குறிக்கின்றனர். எனில் ஓய்மான் நாடு எனும் நிலப்பரப்பு நல்லியக் கோடனின் ஆட்சிக்கு உட்பட்டதாக இருந்தது என்பதை அறிய முடிகின்றது. நல்லியக் கோடனைப் புகழ்ந்து பாடிய ஆசிரியர் இடைக் கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் என குறிப்பிடப்படுவதால் இடைக்கழி நாடு என்கின்ற நாடும் நல்லியக்கோடனின் ஆட்சி க்கு உட்பட்டதாக இருந்தது என்பது அறிய முடிகின்றது. நல்லியக்கோடனைப் புகழ்ந்த ஆசிரியர் அவனது ஆட்சிக்கு உட்பட்ட நிலப்பரப்பை மட்டும் குறிப்பிடாமல் சேர

நாட்டினுடைய நிலப்பரப்பாக வஞ்சி நகரமும், பாண்டிய நாட்டு நிலப்பரப்பாக மதுரை மாநகரமும், சோழ நாட்டின் நிலப்பரப்பாக உறந்தையும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. மேலும் நல்லியக்கோடனின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஐவகை நிலங்கள் ஆகிய குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலப்பரப்புகளும் இடம்பெற்றுள்ளன. இந்நிலப்பரப்புகளில் வாழும் மக்கள் தங்களின் நிலங்களில் விளையும் உணவுகளை வந்த விருந்தினர்களுக்கு உணவளித்து மகிழ்ந்துள்ளனர். வந்த விருந்தினர்களை வரவேற்று, உபசரித்து தங்களது இல்லத்தில் உள்ள உணவுகளை வழங்கி விருந்தோம்பலைச் செய்துள்ளனர் என்பதன் வழி தமிழர்களின் விருந்தோம்பல் பண்பாட்டையும் உணர முடிகின்றது. இக்கட்டுரை நல்லியக்கோடனின் நிலப்பரப்பும் அந்த நிலப்பரப்பில் வாழும் மக்களின் விருந்தோம்பல் பண்பாடும் சிறப்புடன் விளங்கியதை அறிய முடிந்தது.

**பயன் பட்ட நூல்கள்**


1. பெருமழைப்புலவர் பொ. வே சோமசுந்தரனார், உரையாசிரியர், பத்துப்பாட்டு (பகுதி 1, பகுதி 2) கழக வெளியீடு, ஆழ்வார்பேட்டை, சென்னை- 600 018
2. கே.கே. பிள்ளை, தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும், உலக தமிழ் ஆராய்ச்சி நிலையம், தரமணி, சென்னை.
3. தக்ஷிணாமூர்த்தி, தமிழர் நாகரீகமும் பண்பாடும், 2016, ஐந்திணை பதிப்பகம், சென்னை.
4. சாமி சிதம்பரனார், எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும், அறிவு பதிப்பகம், சென்னை, பதிப்பு: 2008
5. தொல்காப்பியம் தெளிவுரை- முனைவா ச.வே.சுப்பிரமணியன், மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை- 600108